**ARTICLE 54 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00062**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 5–10
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# இரா. நாறும்பூநாதன் படைப்புகளில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள்

**முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா.**[1,*]
[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா. — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

குழந்தை தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் ஒரு பெரும் சாபக்கேடு ஆகும். குழந்தைகள் வேலைக்குச் செல்வது என்பது ஒரு தனிநபரின் பிரச்சனை அல்ல. அது ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்தை இருட்டிற்குள் தள்ளும் சமூகக் குற்றமாகும். சட்டங்களினாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும் மட்டும் இந்த அவலத்தை முழுமையாக வேரறுக்க முடியாது என்பதை இரா. நாறும்பூநாதன் படைப்புகள் மூலம் அறிய முடிகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** குழந்தை-தொழிலாளர்- பொருளாதாரம்- வளர்ச்சி _பிரச்சனை- குடும்பம் -சமூகம்- மனம்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சா.ஜா., மு. கீ. ர. பா. (2026). இரா. நாறும்பூநாதன் படைப்புகளில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

குழந்தைத் தொழிலாளர் முறை என்பது நவீன உலகின் மிகக் கொடிய சமூக அவலங்களில் ஒன்றாகும். 'இன்றைய குழந்தைகளே நாளைய பிரைஜகள்' என்ற பொன்மொழிக்கு மாறாக, நாட்டின் எதிர்காலத் தூண்களாக விளங்க வேண்டிய பிஞ்சுப் பிள்ளைகள், பேனா பிடிக்க வேண்டிய வயதில் சுத்தியலையும், பாத்திரங்களையும் ஏந்தி தங்களின் இனிமையான குழந்தைப்பருவத்தை இழந்து நிற்கின்றனர். ஒரு குழந்தையின் உடல், மனம் மற்றும் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில், அவர்களைக் கட்டாயப்படுத்தி ஏதேனும் ஒரு பொருளாதார வேலையில் ஈடுபடுத்துவதே குழந்தைதத் தொழிலாளர் முறை என வரையறுக்கப்படுகிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐடுமு) கூற்றுப்படி, இது குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் மாபெரும் குற்றமாகும். அத்தகைய குழந்தை தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்து நாறும்பூநாதன் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

குழந்தைத் தொழிலாளர்கள்

குழந்தை தொழிலாளர் என்பது குடும்பச் சூழல் காரணமாகவும், பொருளாதார சீர்கேட்டின் காரணமாகவும் இப்பிரச்சனைகளுக்கு குழந்தைகள் ஆளாகின்றனர். குழந்தைத் தொழிலாளர் என்பது தொடர்ந்து, நீடித்த பணியில் குழந்தைகள் தொழிலாளர்களாகக் ஈடுபடுவதைக் குறிக்கின்றது. எல்லா நாடுகளிலும் சட்ட விரோதமாக நிறுவனங்களில் பல

இக்கொடுமை நடைபெறுகிறது. தொழில்துறையில் ஏற்பட்ட வேலை மாற்றம், வேலையாளர்களுக்கும், குழந்தைகளின் உரிமைகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துக்களால் குழந்தைத் தொழிலாளர் முறை தற்போது உலகெங்கும் பரவியுள்ளது.

'வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளரின் வயது மாறுபட்டதாக உள்ளது. பள்ளி வேலை மற்றும் வீட்டு வேலை தவிர பிற வேலைகளுக்கு குழந்தைகள் பணியமர்த்தக்கூடாதென வாள்ச்சியைடந்த நாடுகள் கூறுகின்றன. குறிப்பிட்ட வயதுகளுக்கீழ் உள்ள குழந்தைகள் கண்டிப்பாகப் பணியமர்த்தக் கூடாது. இந்த குழந்தைத் தொழிலாளர் வயது வித்தியாசமும் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தைத் தொழிலாளர் சட்டப்படி, 16 வயது நிறைவு பெறவதற்கு முன்பாக குழந்தைகளைப் பணியில் அமர்த்தக்கூடாது என்பதுடன் பெற்றோரின் சம்மதமில்லாமல் வேலைக்கு அனுமதிக்கக்கூடாது என்பதாகும்.' (வய. றுமைipநனயை.ழசப)

பாரதியார் பார்வையில் குழந்தைகள்

அதிக வறுமை காரணமாகவும் குடும்ப சூழல் காரணமாகவும் குழந்தைகள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். குழந்தைகளுக்கு கல்வி அறிவினைப் புகடும் பெற்றோர்கள் கூட தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். இதனால் சில இடங்களில் குறைந்த ஊதியத்திற்காக வேலை வாங்குவதும் நடைபெறுகின்றது. இது குழந்தைகளுக்கு மன உளைச்சலை உள்ளாக்குவதுடன் அவர்களது எதிர்காலத்தையும் பெரிதும் பாதிக்கின்றது. ஒரு நாட்டினுடைய எதிர்காலம் அங்கு வளர்கின்ற குழந்தைகளில் தான் உள்ளது. குழந்தைகள் ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் அறிவுத் திறனுடனும் வளர்வது தான் அக்குழந்தைக்கும் அவன் நாட்டிற்கும் நன்மை அளிக்கும். இதனை,

'காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா' (பாரதியார் குழந்தைகள் பாடல்கள்,
பாப்பா பாட்டு-6)

என்று பாரதியார் குழந்தைகளின் வாழ்வை நான்கு வரிப்பாட்டில் பாடியிருப்பதன் மூலம் அறிய முடிகின்றது. குழந்தைகள் அந்தந்த வயதில் அவர்களுக்கு உரிய செயல்களைச் செய்ய வேண்டும். படிக்க வேண்டிய காலத்தில் படித்தும், விளையாட வேண்டிய பருவத்தில் விளையாடவும் வேண்டும். செய்ய வேண்டிய செயல்களை செய்வதால் மட்டுமே குழந்தைகளின் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் சீராக அமையும். இல்லையெனில் அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல இன்னல்களையும், பல துயரங்களையும் அடைகின்றனர் என்பதையும் நம்மால் காணமுடிகின்றது.

குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலை

குழந்தை தொழிலாளர்கள் எனப்படுவர்கள் ஐந்து வயது முதல் பதினெட்டு வயது வரை உள்ளவர்கள் அவர்களின் சுதந்திரமும் உரிமையும் மறுக்கப்படும் வேலைகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளைக் குறிக்கின்றது எனலாம். இத்தகைய குழந்தை தொழிலாளர்கள் தாய்,

தந்தையை இழந்தவர்களாகவோ அல்லது குடும்பச் சூழ்நிலையின் காரணமாகவோ வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது பழமொழி என சிறுவயதிலேயே இவர்கள் குடும்ப பாரத்தைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பதையும் காணமுடிகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்ளாகும் குழந்தைகள் பல்வேறு பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.

இவ்வுலகெங்கிலும் பத்தில் ஒரு குழந்தை, குழந்தைத் தொழிலாளியாக மாற்றப்படுகிறது என புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. வறுமையின் காரணத்தினாலும், தாய், தந்தையர்களை இழந்தமையினாலும் போதைக்கு அடிமையான குடும்பங்களில் அவர்களுக்குப் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கவும் குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். இதுமட்டுமின்றி பாதுகாப்பற்ற முறையில் அனாதையாக விடப்படும் குழந்தைகள் சில சமூக விரோதிகளால் சிலரால் குழந்தைத் தொழிலாளர்களாக மாற்றப்படுகின்றனர் என்பதையும் காணலாகின்றது.

'இளமையில் கல்' என்பது ஔவையார் கூறும் அறிவுரையாகும். ஆனால், குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்லாமல் வேலைக்குப் போவதால் அவர்கள் பெரும் மனவருத்தத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனை 'ஓர் இரவு' என்ற சிறுகதையிலும் 'ரயில்வே தண்டவாளங்களும் சில புறாக்களும்' என்ற சிறுகதையிலும் இரா.நறும்புநாதன் கூறியிருக்கிறார்.

பனிரெண்டு வயதுடைய சிறுமி வேலைக்குச் செல்கிறாள். அவளால் இயலாத காரணத்தால் அவள் வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று கூறுகிறாள். இதனால் அவளுடைய அம்மா திட்டுகிறான். இக்காரணத்தால் அந்தச் சிறுமி வீட்டை விட்டு வெளியேறி விடுகிறாள் என்பதனை 'ஓர் இரவு' என்ற சிறுகதையில் வழி ஆசிரியர் கூறுகிறார். தீப்பெட்டித் தொழிற்சாலையக்கு வேலைக்குச் செல்கிறாள் அந்தச் சிறுமி அவள் அங்கு குச்சி உருவும் வேலை செய்கிறாள். அவள் அவ்வாறு குச்சி உருவும் போது தீப்பெட்டி மருந்து கையில் பட்டுக் கையெல்லாம் தீப்பொக்களமாக ஆகிவிடுகிறது. இதனால் அச்சிறுமி வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று கூறுகிறாள்.

'நேத்து ஆபிஸிலே கட்டையிலேர்ந்து குச்சி உருகிறப்போ எரிமருந்து ரோசி கையெல்லாம் தீப்பொக்களமா ஆயிருச்சி வலி தாங்க முடியல' (இரா. நாறும்பூநாதன், இலை உதிர்வதைப் போல, ப..54)

என்று கூறுவதிலிருந்து அச்சிறுமியின் உடல் வேதனையையும் வேதனையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இச்சிறுமியின் தாய் குடும்பச்; சூழ்நிலையின் காரணமாக வேலைக்குப் குழந்தைகள் வேலைக்குப் போனால் தான் இரவு வீட்டிற்குச் சாப்பிட வேண்டும் இல்லையென்றால் எங்கேயாவது போய்விடு என்று இதனால் அச்சிறுமி வீட்டை விட்டே வெளியே விடுகிறாள் என்பதை.

'எங்கத்தா உடனே 'ஏ மூதேவி! கட்டையிலே போறவளே'ன்று தாறுமாறாய் திட்டிட்டு இன்னிக்கி வேலைக்குப் போகாம ராத்தீவனம் திங்க வந்திராதே! ஏம் மூஞ்சிலே முழிச்ச முதுகுத்தொலி பிஞ்சு போகும்னுட்டு காட்டுக்குப் போயிட்டா' (மேலது, ப.54)

என்று கூறுவதிலிருந்துப் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாகச் சாலையேரங்களில் கண்டிப்பாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதையும் இது முலம் அறிய முடிகின்றது.

தற்காலத்திலும் பொருளாதாரச்; சூழ்நிலையின் காரணமாக சாலையோரங்களில் தங்கி உள்ள குடும்பங்கள் அன்றாட உணவுத் தேவைக்காக குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இன்னும் சிலர் குழந்தைகளைப் பிச்சை எடுக்கவும் வைக்கின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

இச்சிறுமி வேலைக்குச் செல்வதற்குக் காரணம் அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை என்பதை,

'உங்கப்பா என்ன பண்ணுதாரு?'
'லெச்சுமி மில்லே வேலை பாக்காரு'
'அப்ப நெறையச் சம்பாம் வாங்குவாருள்ளா?'
'கொஞ்ச நாள் தான் ஆகுது... கொஞ்சமாத்தான் ஆத்தாகிட்டே
ரூபாயெல்லாம் கொடுப்பாரு' (மேலது, பக். 54-55)

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. இச்சிறுமியின் தந்தை மில்லில் வேலைப் பார்த்தாலும் வீட்டில் ரூபாய் குறைந்தளவே தான் கொடுக்கிறார் என்பதனால், இச்சிறுமி வீட்டில் பெருளாதாரத்திற்காகக் கட்டாயம் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

ரயில்வே தண்டவாளங்களும் சில புறாக்களும் என்கிற சிறுகதையில், ரயில்வே கேட்டின் அருகில் மரத்தடியில் உட்கார்ந்து வெள்ளரிப்பிஞ்சு விற்கும் குழந்தைகளின் நிலையைக் கூறுகிறார். ரயில் அந்தப் பாதை வழியே செல்லும் போது, ரயில்வே கேட் மூடும் அந்த நேரத்தில் வெயில் சுட்டெரிக்கும். அக்கந்தக பூமியில் சிறுவர்களும் சிறுமியரும் வெள்ளரிப் பிஞ்சுகளைத் தட்டுகளில் வைத்துக் கொண்டு விற்பதற்குத் தயாராக இருப்பர் என்பதையும் கேட் முடியவுடன் அங்கு நிற்கும் லாரிகள் மற்றும் பேருந்துகளில் இருப்பவர்களிடம் ஓடிச் சென்று விற்பனை செய்வர்.

'அண்ணே வெள்ளரிப் பிஞ்சுண்ணே! தட்டு மூணு ரூவான்னேன் . . . ஒரு
தட்டு வாங்கிக்கங்கண்ணே

காலையில் பதினோரு மணிக்கும் மதியம் இரண்டு மணிக்கும் வேப்பிலைப்பட்டிக்குச் செல்லும் ஜெயவிலாஸ் பஸ்ஸில்தான் சிறுவர்களுக்கு வியாபாரம் நன்றாக இருக்கும்.' (மேலது, ப.92)

என்று கூறுவதிலிருந்து கேட் மூடும் அந்த நேரங்களில் மட்டுமே அவர்களுக்கு விற்பனை இருக்கும் என்பதையும் மீதி நேரங்களில் அங்குள்ள கருவேல மரச்செடியின் கீழ் உட்கார்ந்து இருப்பதையும் இந்தச் சிறுகதையின் மூலம் காண முடிகிறது.

கல்வி நிலைப் பாதிப்படைதல்

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

மாரிக்கனி என்னும் சிறுமி நன்றாகப் படிக்கச் கூடியவள். அவள் கடந்த ஆண்டு வரை பள்ளிக்குச் சென்றாள். ஆனால், தற்போது வெள்ளரிப்பிஞ்சு விற்கிறாள். இதற்குக் காரணம் கேட்கும் போது மாரிக்கனியின் தாய் அவளைப் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று கூறுகிறாள். இதனை,

'எங்கம்மாதான் படிச்சது போதும்னுட்டா! மாரிக்கனி சலிப்புடன் கூறினாள்.. ஆமா... படிச்ச பெரிய்ய மச்சார் வேலைக்குப் போகப் போறாளாக்கும்.. பேச்சியும் காளியும் கிண்டல செய்தார்கள்' (மேலது, ப.93)

என்று இக்கதையின் ஆசிரியர் கூறுவதிலிருந்து குடும்பச் சூழ்நிலையின் காரணமாக வெள்ளரிப்பிஞ்சு விற்பதையும் அறிய முடிகின்றது.

மாரிக்கனி மட்டுமின்றி இசக்கியம்மாள் என்ற சிறுமியும், தவசி, பேச்சி, காளி போன்றவர்களும் வெள்ளரிப்பிஞ்சு விற்பனைச் செய்கின்றனர் என்பதையும் இக்கதையில் காணமுடிகின்றது. இந்த வெள்ளரிப்பிஞ்சை விற்பதற்கு இச்சிறுமிகள் மழையிலும் வெயிலிலும் வருத்தப்பட வேண்டியுள்ளதை, 'வெயில் சுட்டெரிக்கும் அந்த கந்தக பூமியில் நிழலுக்கு ஒதுங்கக்கூட இடமின்றி கருவேலமரச் செடியின் கீழ் உட்கார்ந்து வெள்ளரிப்பிஞ்சுகளைத் தட்டில் வைத்து விற்றுக் கொண்டிருப்பார்கள்' (மேலது, ப.95) என்பதிலிருந்து அறிய முடிகின்றது.

இவ்வாறு குழந்தைகள் சிறுவயதிலேயே வேலைக்குச் செல்வதால் 'பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்' என்பது போல குழந்தைகள் வேலைக்குச் செல்லும் இடங்களில் தவறான நபர்கள் சிலருடன் பழக்கம் ஏற்பட்டுக் குழந்தைகளும் சிறுவயதிலேயே போதைப்பழக்கம் போன்ற தவறானச் செயல்களால் அவர்களின் வாழ்க்கைச் சிறுவயதிலேயே பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இவை மட்டுமின்றி, மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய குழந்தைப் பருவத்திலேயே அவர்களைக் கொடுமைப் படுத்தவதனால் அவர்கள் உளவியல் ரீதியாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வுலகிலேயே மனித வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான பருவம் குழந்தைப் பருவமே ஆகும். இந்தக் குழந்தை பருவம் எல்லோருக்கும் மகிழ்ச்சியானதாக இருப்பதில்லை. அதவும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு இவை வலிகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. பிற குழந்தைகளைப் பார்க்கும் போது நம்மால் இவ்வாறு பள்ளி செல்ல முடியவில்லை. உடை உடுத்த முடியவில்லை என்ற ஏக்கங்கள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இதனால் அவர்கள் தவறான பாதையில் செல்வதற்கும் காரணமாக அமைகின்றன.

## முடிவுரை

குழந்தை தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் ஒரு பெரும் சாபக்கேடு ஆகும். குழந்தைகள் வேலைக்குச் செல்வது என்பது ஒரு தனிநபரின் பிரச்சனை அல்ல. அது ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்தை இருட்டிற்குள் தள்ளும் சமூகக் குற்றமாகும். சட்டங்களினாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும் மட்டும் இந்த அவலத்தை முழுமையாக வேரறுக்க முடியாது என்பதை இரா. நாறும்பூநாதன் படைப்புகள் மூலம் அறிய முடிகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## துணைநூற் பட்டியல் (References)

1. இரா. நாறும்பூநாதன் படைப்புகள், இலை உதிர்வதைப் போல
2. பாரதியார் பாடல்கள், திருமகள் பதிப்பகம், சென்னை

© 2026 முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..